# இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் - 2012

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை இல. 1.7 இன் பிரகாரம் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கெள்ளப்பட்ட சொத்துக்கள், அச் சொத்துக்களின் ஆயுட் காலத்திற்குள் படிப்படியாக ஓர் அடிப்படையில் வருமானமாக இனங்காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்ட போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 21 ஆம் நூற்றாண்டில் உயர் கல்விச் செயற்திட்டத்தால் இலங்கை உயர் தொழிநுட்ப நிறுவகங்களில் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 6,095,192 பெறுமதியான கணனி, பிரக்சேபன இயந்திரம் மற்றும் தளபாடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதன, பொறி, உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படுகையில் ரூபா 977,112 குறைத்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீடு செய்யப்பட்டிருந்தமையால் வட்டி சரியாகக் கணிப்பிடப்பட்டிராத காரணத்தால் முதலீட்டு வட்டி ரூபா 158,614 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உயர் தொழிநுட்ப நிறுவகத்தில் ரூபா 23,378,804 தொகையான நிர்மாண நிலையில் உள்ள கட்டிடம் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 163,727,770 கூட்டுத்தொகையான ஆதன, பொறி, உபகரணங்கள் மீள் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2005, 2006 ஆம் ஆண்டுகளின் போது மூன்று உயர் தொழிநுட்ப நிறுவகங்களில் தற்போது சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 134,395 தொகையான இடர் கடன் தவணைகளையும் வட்டியையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் நிலவிய ரூபா 12,627,188 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் அரச பிரிவிற்கும் தனியார் பிரிவினருக்கும் செலுத்த வேண்டிய 04 ஆண்டுகள் கடந்த கடன் மீதிகள் முறையே ரூபா 6,795,503 ஆகவும் ரூபா 1,273,473 ஆகவும் காணப்பட்டது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 13,958,556 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1997 சனவரி 24 ஆம் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட அமைய ஊழியர்கள் மூவர் உயர் கல்வி அமைச்சின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டு நிறுவகத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 618,979 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக முறையான அங்கீகாரம் இருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் 2.11 ஆம் உப பந்தி | ரூபா 2,203,124,581 பெறுமதியான ஆதன, பொறி, உபகரணங்களுக்காக சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 135 | 2012 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி அதிகாரப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயம் | உயர் தொழிநுட்ப நிறுவகத்தில் லீவுப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிராததுடன் உயர் தொழிநுட்ப நிறுவகமொன்றில் ஓர் பணிப்பாளர் மீளாய்வாண்டின் போது லீவுப் படிவங்களின் மூலம் உறுதிப்படுத்தாது 44 ½ நாட்கள் லீவைப் பெற்றிருந்த சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2008 சனவரி 02 ஆம் திகதிய ஏஜ/02/15 ஆம் இலக்க இலங்கை உயர் தொழிநுட்ப கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | இரு உயர் தொழிநுட்ப நிறுவகங்களின் விரிவுரையாளர்களின் விரிவுரைகள் நடாத்தப்படுவதை பரிசீலனை செய்யப்படக் கூடிய வகையில் சுற்றறிக்கையின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைப் பதிவேடு முறையாக பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 108,514,206 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 101,085,841 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,428,365 ஆல் அதாவது 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆளணி சம்பளம், உடன்படிக்கையிடப்பட்ட சேவைகள் மற்றும் பயிற்சி மற்றும் மதிப்பீட்டுச் செலவினங்கள் முறையே ரூபா 12,616,412 ஆலும் ரூபா 12,512,605 ஆலும் ரூபா 11,601,443 ஆலும் அதிகரித்தமை குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 நிறுவகத்திற்கு எதிராக உள்ள சட்ட நடவடிக்கைகள்

நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளுக்காக ரூபா 342,960 தொகையான ஊழியர் நட்டஈட்டுத் தொகையைச் செலுத்துவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதால் இதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் நடாத்தப்படும் மொத்தப் பாடநெறிகளில் 2011 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட சதவீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அந்த அளவு 9 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டின் போது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 38 சதவீதமானோர் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். விபரம் பின்வருமாறாகும்.

| உயர் தேசிய பாடநெறிகள் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்தோர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கையில் சித்தியடைந்த சதவீதத்தின் நூற்றுவீதம் |
|---|---|---|---|
| கணக்கீடு | 3234 | 1443 | 45 |
| முகாமைத்துவம் | 774 | 342 | 44 |
| வியாபார நிர்வாகம் | 187 | 66 | 35 |
| வியாபார நிதீயீடு | 63 | 37 | 59 |
| ஆங்கிலம் | 1670 | 627 | 38 |
| தகவல் தொழிநுட்பம் | 712 | 215 | 30 |
| சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 107 | 43 | 40 |
| உணவு தொழிநுட்ப | 33 | 14 | 42 |
| போறியியல் | 897 | 114 | 13 |
| அளவுகள் மற்றும் அளவீட்டு ஆய்வு | 79 | 19 | 24 |
| கட்டிட சேவைகள் பொறியியலாளர் | 26 | 09 | 35 |
| தொழிநுட்ப (விவசாயம்) | 260 | 158 | 61 |
| மொத்த விளைவு | **8042** | **3087** | **38** |

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆறு உயர் தொழிநுட்ப நிறுவகங்களால் பயன்படுத்தப்பட்ட காணிகள் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிறுவகத்திற்கு கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உயர் தொழிநுட்ப நிறுவகம் ஸ்தாபிக்கப்படும் இலக்கிற்கும் நோக்கங்களுக்கும் இடையில் பாடநெறிகளின் பல்வகைத் தன்மையை ஏற்படுத்தல், புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் கட்டணங்களை அறவிடும் பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் ஆகியவை உள்ளடங்கியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் கல்வி பாடநெறிகள் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் அறிமுகப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- உயர் தேசிய ஒப்பந்த டிப்ளோமா
- உயர் தேசிய மென்பொருள் பொறியியல் டிப்ளோமா
- உயர் தேசிய தொடர்பாடல் டிப்ளோமா
- தோட்ட விஞ்ஞானம் தொடர்பான தொழிநுட்ப சான்றிதழ் பாடநெறி
- இரத்தினக்கல் தொடர்பான தொழிநுட்பச் சான்றிதழ் பாடநெறி

மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒரு உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பாடநெறியை அறிமுகப்படுத்துகையில் பாடநெறி விடய விபர (ஊழரசளந ழரவடநைெ) அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் பாடநெறிகளுக்கு தேவையான போதிய வளங்களை வழங்குவதற்கு தலைமை அலுவலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒரு உயர் தொழிநுட்ப நிறுவகத்தால் 2012 ஆம் 2013 ஆம் கல்வி ஆண்டிற்காக எந்த ஒரு மாணவனும் சேர்க்கப்பட்டிராததுடன் தற்போது நடாத்தப்பட்டு வரும் உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமாவிற்காக வெளி விரிவுரையாளர்கள் மாத்திரம் விரிவுரைகளை நடாத்தியிருந்த போதிலும் அவ் விரிவுரைகளை நடாத்துவதற்காக நிரந்தர இடமொன்று இருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை ஒன்றும் நிதிக்கூற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2013 மே 28 ஆம் திகதியே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் 2013 மே மாதமே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த பாதீடும் நிதிக்கூற்றுக்களுடன் ஒத்திசைந்து போகாமையால் செயல்நடவடிக்கைத் திட்ட இலக்கை எய்தும் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது ஆய்வுசெய்ய முடியாதிருந்தது.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

2012 ஆம் ஆண்டில் ரூபா 138,963,492 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 இன் பிரகாரமும் நிதிக்கூற்றுக்களுக்கு இணையாக பாதீடு தயாரிக்கப்பட்டிராததுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 29 சதவீதத்திலிருந்து 56 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4.6 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2010 ஆம் 2011 ஆம் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதிவுப் பொருட் கட்டுப்பாடு
(ஆ) காணி கட்டிட கையேற்பு மற்றும் கணக்கீடு
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) நூலக நிர்வாகம்
(உ) விடுதிக் கட்டுப்பாடு
(ஊ) பண்ணைக் கட்டுப்பாடு
(எ) பரீட்சைகள் நடாத்தல்
(ஏ) அடியிதழ் புத்தகங்கள்